Registered as a News Paper பக்கங்கள் : 04 விலைரூபா: 5-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 16 (01-09-1992) செவ்வாய்க்கிழமை ஒசை 1:6

## உலகசாதனை புத்தகத்தில் தேர்தல் ஆட்சேபனை வழக்கு

விசாரிப்பதற்கு அதிக நாள்கள் எடுத்த சிறிலங்காவின் நீதி நிர்வாக வரலாற்றில் மிக நீண்ட வழக்கான ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு உலக சாதனைகள் பதிவேடாகிய கின்னேர்ஸ் புத்தகத்தில் இடம்பெறும் என்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்குத் தொடர்பான விபரங்களைத் தனக்கு அனுப்பியுதவுமாறு கின்னேர்ஸ் பதிவேட்டின் பிரதி ஆசிரியர் நீக்ளஸ் ஹீத்புறவுண் உச்ச நீதிமன்றப் பதிவாளரைக் கடித மூலம் கேட்டுள்ளார். டிசம்பர் 19 - 1988 இல் சிறிலங்காவின் ஜனாதிபதியாக ஆர். பிரேமதாசா தெரிவு செய்யப்பட்டதையும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாசாவின் ஆட்சி கவிழுமா?

# இன்று ஜனாதிபதி வழக்கு தீர்ப்பு

### விண்ணப்ப முடிவு நீடிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்க்கான வினைத்திறன்காண் பரீட்சை, ஆங்கில மொழிப் பரீட்சைக்காக விண்ணப்பம் செய்பவர்களுக்கான முடிவுத்திகதி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் பதினைந்தாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஜூலை மாதம் கிராம சேவையாளருக்கு நடைபெற்ற பரீட்சை [4-ம் பக்கம் பார்க்க]

## நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு இன்று அறிவிக்கப்படும் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. திரு. பிரேமதாசாவின் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் இவ் வழக்கின் தீர்ப்பு பெரிதும் முக்கியம் வாய்ந்தொன்றாகும். இதேவேளை இத்தீர்ப்பு வழங்கப்படவுள்ள உச்ச நீதிமன்ற வளாகத்திற்குள் பிரத்தியேகப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் வழக்கின் தீர்ப்பானது முதலில் செப்டம்பர் 2 ஆம் அல்லது 4 ஆம் திகதிகளில் வெளிவரலாம் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் நேற்று மாலை கிடைக்கப்பெற்ற செய்திகளின் படி இன்று நண்பகல தீர்ப்பு வழங்கபபடவுள்ளதாகத் தெரியவருகின்றது

ஐந்து நீதியரசர்களைக் கொண்ட நீதி மன்றத்தில் 527 நாட்கள் இவ் விசாரணை இடம் பெற்றுள்ளது. இவ்விசாரணையில் 977 பேர் சாட்சியம் அளித்துள்ளனர்

### நீதி மன்றத்திற்கு பலத்த பாதுகாப்பு

உச்ச நீதிமன்ற வளாகத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் முகமாக கடந்த வெள்ளியன்று ஹெப்ஸ்ரப்பில் உச்ச நீதிமன்றப் பதிவாளர் பணிமனையில் உயரதிகாரிகள் மாநாடு ஒன்று நடைபெற்றது.

உச்ச நீதிமன்றப பதிவாளர் பந்துல அத்தபத்து பிரதிப் பதிவாளர் எம்.ஏ சிறில், உயர் நீதிமன்றங்கள் வளாகப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஜோர்ஜ் பெர்னான்டோ, சிரேஷ்ட பொலிஸ் எஸ் பி. றொனி குணசிங்கா பொலிஸ் எஸ் பி ரஞ்சித் பெரேரா, கெகல்வதந்தைப பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்

முன்னதாக உயர் நீதிமன்றங்களின் வளாகப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஜேர்ஜ் பெர்னான்டோ வழக்கின் தீர்ப்பின் முன்பும். பின்பும் நீதிபதிகளுக்குப் பேதிய பாதுகாப்பு வழங்க ஏற்பாடுசெய்யும்படி பொலிஸ் மா அதிபர் ஏர்ணஸ்ட பெரேராவை எழுத்து மூலம் கேட்டிருந்தார் சீன அரசின் நன்கொடையில் மிக நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட நீதிமன்ற கட்டடங்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது பாதுகாப்பு வழங்குமாறும் அவர் பொலிஸ் மா அதிபரைக் கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

### கலவரங்களை அடக்க பொலிசாருக்கு அதிகாரம்

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கின் தீர்ப்பு ...றுவழங்கப்படவுள்ளதை ...த்து கலவரங்கள் ஏற்பட்டால் அதனை அடக்கப்பொலிசாருக்குப் பூரண அதிகாரம் ...ழங்கப்பட்டுள்ளது.

அவசரகாலச்சட்டத்தின் கீழ் பொலிசாருக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்குத் தீர்ப்பையடுத்து கலவரங்கள் வெடிக்கலாமென எதிர் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### தீர்ப்பை வழங்கியவுடன் நீதிபதி வெளிநாடு பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான தீர்...தக்கது.

தீர்ப்பு வழங்கிய அன்றே பிரதம நீதியரசர் ஜி.பி.எஸ்.

## அக்கரைப்பற்று தமிழ் பிரதேசம் அதிரடிப்படையால் சுற்றிவளைப்பு

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று தமிழ் பிரதேசத்தில் பாரிய சுற்றிவளைப்பொன்றை சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் அண்மையில் நடத்தி பெருந்தொகையனவர்களை முகாமிற்கு அழைத்துச் சென்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள் என்றும். கோளாவில் தமிழ்க் கிராமமும் அடிக்கடி சுற்றிவளைக்கப்படுகிறது என்றும் தெரியவருகிறது.

அக்கரைப்பற்று தமிழ் பிரதேசத்திற்குள் வெளியார் எவரும் வருவதாக இருந்தால் அவர் தன்னைப் பற்றிய விபரங்களை அக்கரைப்பற்று அதிரடிப்படை பொறுப்பதிகாரியிடம் தெரிவித்து அவர் தங்கியிருக்கும் உறவினரின் வீட்டு விலாசத்தையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

மேலும் அக்கரைப்பற்று பிரதேசத்தை அண்டியுள்ள காட்டுப் பிரதேசங்களிலும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கடந்த சில தினங்களாக கடற் [4-ம் பக்கம் பார்க்க]

### 40 தமிழ்க் குடும்பங்களின் கதி பற்றி தெரியவில்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள லதகலை பாம் பகுதியில் வாழ்ந்து வந்த நாற்பது தமிழ்க் குடும்பங்களும் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் சிதறுண்டு எங்கெங்கோவெல்லாம் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

மேற்படி நாற்பது குடும்பங்களையும் சேர்ந்த 206 பேர் தொடர்பான எந்தவொரு தகவல்களும்திரட்டமுடியவில்லை என்றும், இது தொடர்பாக அரசாங்க அதிகாரிகளால் கூட இவர்களைப் பற்றிய தகவல்களை பெறமுடியவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக ஒவ்வொரு குடும்பமும் பாதுகாப்புத்தேடி எங்கெங்கோ சென்று தற்காலிக கொட்டில்களிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் (4 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை அகதி முகாமில் 36 குடிசைகள் தீக்கிரை

[திருக்கோணமலை]

திருக்கோணமலை முத்து நகர் முத்து அகதிகள் முகாமில் 36 ஓலைக் கொட்டில்கள் தீப்பிடித்து எரிந்துள்ளன. இது தற்செயலான சம்பவம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமையல் அறையில் இருந்து பரவிய தீ ஏனைய கொட்டில்களையும் எரித்துள்ளது. இச் சம்பவத்தில் எவருக்கும் காயமோ, உயிரிழப்போ ஏற்படவில்லை இந்த அகதிகள் முகாமை மீண்டும் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 5 வருடத்தில் 5600 கோடி ரூபா

சமையல் அறையில் இருந்து

பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நதிபதி வெளிநாடு பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான தீர்ப்பை வழங்கியதும் பிரதம நீதியரசர் ஜி. பி எஸ். டி சில்வா வெளிநாடு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வழக்கை விசாரித்த ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழுவிற்கு பிரதமநீதியரசர் தலைமை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தீர்ப்பு வழங்கிய அன்றே பிரதம நீதியரசர் ஜி பி.எஸ். டி சில்வா ஆபிரிக்க நாடான நைஜீரியாவிற்குப் பயணமாகவுள்ளார் என்று உச்சநீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர் நைஜீரியாவில் நீதிபதிகள மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளபபயணமாகின்றார் என றுசொல்லப்படுகிறது

## வழக்கின் தீர்ப்பை அடுத்து

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் களை பிடுங்கல் நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஐக்கிய தேசியக் கட்சியிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். வழக்குத் தீர்பபு ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவுக்குச் சாதகமாக அமைந்தால் என்ன, பாதகமாக அமைந்தால் என்ன, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பாரிய விளைவுகளை உண்டு பண்ணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொலநறுவையில் வெள்ளியன்று நடைபெற்ற ஐ தே. கட்சி மாவட்டக் கருத்தரங்கில் ஜனாதிபதி ஆர் பிரேமதாசா கட்சியில் நடைபெறவுள்ள மாற்றங்களைச் சூசகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார் என்று கூறப்படுகிறது.

''என்னைப் போல் ஓர் யானையைக் கழுகுகளால் ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது. எமது யானைக் கூட்டத்திலும் சில மதம் பிடித்த யானைகள் உள்ளன. அவர்களை நான் மிகவிரைவில் விரட்டவுள்ளேன்'' என்று மேற்படி மாநாட்டில் பேசிய ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தல் வழக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

... பதிவாளர் எம்.ஏ சிறில், உயர் நீதிமன்றங்கள் வளாகப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஜோர்ஜ் பெர்னா ... கும் ஏற்படாது பாதுகாப்பு வழங்குமாறும் அவர் பொலிஸ் மா அதிபரைக் கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## மோசமான சூழலில் நடைபெற்ற தேர்தல்

### ஆட்சேப மனுவில் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தான் பிரதமராக பதவிவகித்த காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டார். தேர்தலின் போது அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபமனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் நாட்டில் பாதுகாப்பு நிலைமை மிகவும் மோசமான சூழ்நிலையில் இத்தேர்தல் நடாத்தப்பட்டது எனவும், எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவான பகுதிகளில் வேண்டுமென்றே பாதுகாப்பு ஏற்பாடுகளில் கவனம் செலுத்தாமல் விட்டதன் மூலம் எதிர்க்கட்சி ஆதரவாளர்களை வாக்களிக்கவிடாது செய்தனர் எனவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி

ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள பொதுவேட்பாளரை நிறுத்துவது என்ற எதிர்க்கட்சிகளின் திட்டம் மீண்டும் தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது

ஜனாதிபதி தேர்தலை மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் வரக்கூடிய ஏனைய தேர்தல்களையும் இக்கூட்டணியே எதிர்கொள்வது பற்றியும் எதிர்க்கட்சிகள் வட்டாரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் ஜனாதிபதிக்கெதிரான தேர்தல் ஆட்சேபனை வழக்கு பற்றிய தீர்ப்பு இன்று வழங்கப்படும் என தெரியவருகிறது

நாடு முழுவதிலும் உள்ள மக்கள் இவ் வழக்கின் தீர்ப்பை அறியப் பெரும் ஆர்வத்துடன் இருப்பதாயும்,

வழங்கின தீர்ப்பை பெருமளவு மக்கள் நேரடியாக கேட்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரியவருகிறது.

# 5 வருடத்தில் 5600 கோடிரூபா ராணுவ செலவீட்டிற்கு ஒதுக்கீடு

சிறிலங்காவின் இராணுவச் செலவீனம் தேசிய வருமானத்தில் 6 சதவீதம் எனக் கணிக்கப்பட்டுள்ளது 1985 க்குமுன் இச்செலவு தேசிய வருமானத்தில் 2 சதவீதமாக இருந்தது. பாகிஸ்தான் சிறிலங்காவைவிடக் கூடுதலாகச் சுமார் 7சதவீதம் அதன் தேசியவருமானத்தில் இராணுவச் செலவுக்கு ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியா சிறிலங்காவை விட சரிபாதித் தொகையான 3 சதவீதத்தையே இராணுவத்துக்கெனச் செலவிடுவதாக வரவு செலவுத்திட்டத்திலிருந்து தெரியப்படுகிறது.

உலகச் சராசரியாக தேசிய வருமானத்தில் 4 5 சதவீதத்தை இராணுவச் செலவீனங்

[4-ம் பக்கம் பார்க்க]

# அரசின் பொருளாதாரத்தடை; சர்வதேச சமூகம் மௌனம்

## யாழ். மறை மாவட்ட ஆயர் கவலை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையினால் தொடர்ந்து வட கிழக்கு மக்களின் குரல்வளை நெரிக்கப்பட்ட போதிலும் சர்வதேச சமூகம் மௌனம் சாதிக்கிறது எனத் தென் இந்தியத் திருச்சபையின்யாழ். மறைமாவட்ட ஆயர் அதி வண. டி.ஜே. அம்பலவாணர் கூறினார்.

தமிழருக்கான தாயகத்தை நிறுவுவதே பிரச்சினைக்கான தீர்வு காணும் வழியென்றும் அவர் தெரிவித்தார்.

திருச்சபைச்செய்தியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

புலிகளை அழித்துவிட்டுத் தமிழர் பிரச்சினை என்று ஒன்று இல்லை என்று கூறுவதே அரசின் நோக்கமாகும். தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை அரசு அங்கீகரிக்க வேண்டும் சிறிலங்கா தேசிய கிறிஸ்தவச் சபையும் தொடர்ந்து நடைபெறும் யுத்தம் குறித்து அரசைக் குறை கூறியுள்ளது.

விடுதலைப் புலிகள் தாம் பேச்சு வார்த்தைக்குத் தயார் என்று பலதடவைகள் அறிவித்துள்ள போதிலும் அரசு இதற்கு உடன் படுவதாக இல்லை எனவும் தெரிவித்தார்.

# படகைப் பறிகொடுத்த அதிகாரிகளுக்கு தண்டனை

(கொழும்பு)

புலிகளிடம் நவீன விசைப் படகைப் பறிகொடுத்த படை அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என சிறிலங்கா பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

மண்டைதீவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நவீன விசைப்படகொன்று புலிகளால் தாக்கிக் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரிக்க விசேட விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ் விசாரணை முடிவுகளின் அடிப்படையில் இவ்வாறான சம்பவத்திற்கு காரணமாக இருந்த படை அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது பற்றி விசாரிக்க கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சினாரெனஸ் பெர்னான்டோ வடபகுதி வந்தது தெரிந்ததே.

## கிளாலியில்விமானதாக்குதல் படகுகவிழ்ந்து இளைஞன்பலி

(யாழ்ப்பாணம்)

கிளாலியில் படகுமீது விமானம் குண்டு வீசியதில் படகு கவிழ்ந்து இளைஞர் ஒருவர் பலியானார்

நேற்று அதிகாலை படகில் மண்ணெய் ஏற்றிவந்த ஆனையிறவைச் சேர்ந்த இளைஞர் ஒரே சிறிலங்கா விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி பலியானவர் எனத் தெரியவருகிறது. இவ்இளைஞர் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து தற்போது நகர்கோவில் பகுதியில் வசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் போதனா வைத்திய

[4-ம் பக்கம் பார்க்க]

## அகதிகள் அனுப்புவதுதடுக்க மீண்டும் வழக்கு தாக்கல்

(கொழும்பு)

சென்னையிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் 132பேர் நேற்று விமானம் மூலம் திருக்கோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு அகதிகளை திருப்பி அனுபபுவதை தற்காலிகமாக நிறுத்துமாறு

(4-ம் பக்கம் பார்க்க)

குளம் அகழ்ந்து நீர்வளம் பெருக்குவோம்

## வரி விளம்பரம்


### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (சி-4964)

### இன்று செய்வாய் மாற்றம்

(11-9-92) வியாழ மாற்றம், பகவான் ஸ்ரீ நீலகண்ட பாபா அற்புதங்கள் ரூ. 8-50 (நூலாசிரியர் PROF, சத்தியதாசன், O/L — கடந்தகால வினா விடைகள், பாடசாலைக் கொப்பிகள், புத்தகங்கள் விற்பனைக்குண்டு, தினேஷ் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (3107)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியர் பயிற்சியில் க. பொ. த. (சா/த) சித்தியடைந்தவர்களும் சேரலாம். நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. உயர்கலைக் கல்லூரி, 73 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம், (3108)

### your watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with ful guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.

(Oppesite old Vihare) (சி-4970)


### மாட்டுவண்டிப் போட்டி

ஆவரங்கால் விவசாயிகள் ஒருங்கிணைந்து நடாத்துகின்ற மாட்டுவண்டி சவாரிப் போட்டி வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2-00 மணிக்கு ஆவரங்கால் மாட்டு வண்டி சவாரி திடலில் நடைபெற உள்ளது.

போட்டிகள் ஏ. பி. சி என மூன்று பிரிவுகளாக நடைபெறும். தங்கப்பதக்கமும் மற்றும் விலையுயர்ந்த பரிசில்களும் வழங்கப்படும்.

# அரச பாதுகாப்பிலேயே சுவிஸ் அகதிகள் இருப்பர்

## - பிரட்மன்

இலங்கை அரசாங்கம் வழங்கும் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும், அகதிகளின் விருப்பத்தைக் கருத்திற் கொண்டுமே சுவிஸிலிருந்து தமிழ் அகதிகள்திருப்பி அனுப்பப்படுவர் எனசிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

சமீபத்தில் சுவிட்சர்லாந்தில் இருந்து வந்த சுவிஸ் தூதுக்குழு இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது என்றும்,

அகதிகளை நாம் ஏற்றுக் கொள்வோம் என அக்குழுவிற்கு உறுதியளித்துள்ளோம் என்றும், அவர் தெரிவித்தார்.

அத்துடன் திருப்பி அனுப்புவதை எதிர்த்து அகதிகள் நீதிமன்றம் செல்லவும் உரிமையுண்டு எனவும் அவர் தெரிவித்தார்


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் 1992-09-30 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி:- தொழில் நுட்பவலர் தரம் 11 'ஏ'

சம்பள அளவுத் திட்டம்:-

ரூபா 2375/- 11 X 50 - 2925/- (மாதமொன்றிற்கு) (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படிகளும் செலுத்தப்படும்.)

தகைமைகள்:

அ) சிறப்புத் தேர்ச்சிபெற்ற உரியதுறையில் தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா அல்லது அதற்குச் சமனான தகைமை.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பெற்ற நிறுவனமொன்றில் தொழில் நுட்பவியலாளராக பத்தாண்டுகளுக்குப் பொருத்தமான அனுபவம்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: செய்முறைப் பரீட்சை மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும் நடைபெறும்.

குறிப்பு: பின்வரும்தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

அ) இலத்திரனியலில் அல்லது இயந்திரப் பயிற்சித் துறைகளில் பணியாற்றக் கூடிய அறிவைப் பெற்றுள்ளோர்.

அல்லது

(ஆ) இயந்திரப் பொறியியலில் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமாவில் சித்தி பெற்று கடைசல் இயந்திரத்தில் பணியாற்றும் அனுபவம் பெற்றுள்ளோர்.

அல்லது

(இ) இலத்திரனியலில் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமாவில் சித்தி பெற்று இலத்திரனியலில் கருவிகளைத் திருத்துவதில் அனுபவம் பெற்றுள்ளோர்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களும் விபரங்களும் இப்பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக் கிளை) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு 23X10 ச.மீ அளவுடையதபாலுறை அனுப்பப்படல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும். விண்ணப்பங்களும், தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992- 08- 24
(சி- 4976)


### மீன்பிடித் தடை நீக்கம்

குடாநாட்டின் தென்பகுதிக் கடல் ஏரியில் மீன்பிடிக்கப்பகல் நேரங்களில் மீனவர்களைப் புலிகள் அனுமதித்து வருகின்றனர்.

காலை 6.00 மணியில் இருந்து மாலை 6 00 மணி வரை கடல் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்படுகிறது.

கடலில் வைத்துக் கைது செய்யும் மீனவர்களைப் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தி எதிரி குடாநாட்டுள் நுழைந்து விடலாமென்ற நோக்கத்துடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கடந்த சில தினங்களாக மீனவர்களை இரவில் மீன்பிடிக்க புலிகளால் அனுமதிக்கப்படவில்லை என்பது அறிந்த ஒன்றாகும். (21)

## இளம் சிறாரின் எதிர்காலம் தமிழீழ மக்களின் கைகளில்

### - செஞ்சோலை இசைமாலையில் நிஷாந்தி

''செஞ்சோலையின் இளம் சிறார்கள் தமிழீழ மக்களின் அன்புக் குழந்தைகள். இவர்களின் எதிர்கால வாழ்விற்கு தமிழீழ மக்கள்தான் பொறுப்பு.''

இவ்வாறு நேற்று முன்தினம் மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடைபெற்ற செஞ்சோலையின் இசைமாலைநிகழ்ச்சியில் செஞ்சோலையின்சார்பில் பேசிய செல்வி நிஷாந்தி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்கையில், இந்த செஞ்சோலையில் மூன்று வயது தொடக்கம் பதினாறு வயது வரையான 78 பெண் குழந்தைகள் வளர்ந்து வருகின்றார்கள். இவர்கள் எத்துறையில் வளர்ச்சி அடைந்து வருகிறார்களோ அத்துறையில் இவர்களுக்கு ஊக்கம் கொடுக்கப்பட்டு முன்னேற்றப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் கரன்

[தெய்வேந்திரம் சுதாசிங்கம் (சுதா)]

வீரஜனனம் 1963 05-13

வீரச்சாவு 1990-09-01

தமிழினம் அடிமைத்தளையில் சிறைப்பட்ட வேளையில்
தமிழீழ மீட்புக்காய் தன்னுயிரை மதிக்காது பிறர் நலத்தை நேசித்து
தரணியிலே எப்போதும் விடுதலை நோக்குடனே
தன்மானம் மிக்கவனாய் ஏழு ஆண்டுகள் செயற்பட்டாய்-கரன்

சிந்திடும் இரத்தத்தில் தமிழ்ஈழம் மலரும் என்று
இந்திய அமைதிப்படையையும் சிதறடிக்க வைத்தாய்
சிங்கள வெறியர்களையும் சினங்கொண்டு அடக்கிவிட்டாய்

கண்ணிவெடி வைப்பதிலோ கண்ட வெற்றிதான்
ஈழத்தாயும் அறிந்தாளே கரன்
முல்லைத்தீவ்ல் நடந்த நேரடி மோதலிலே

முழுமூச்சாய் செயற்பட்டாய் புறமுதுகு காட்டாது

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 01

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் திக்கத்தில் சிறிலங்கா காவல்துறை அதிரடிப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 3 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலை, கன்னியா வென்னீரூற்று அருகில் சிறிலங்கா இராணுவத்தினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு மணலாறு குமுழமுனைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த -

**2 ம் லெப். கலியுகன்** [பொன்னுத்துரை தங்கராசா - தம்பலகமம், திருக்கோணமலை]

**2-ம் லெப். லுக்மன்** (இராமலிங்கம் ரவீந்திரன் - சின்னக்கரிசல்)

**2-ம் லெப். வரோதயன்** (குருநாயகம்பிள்ளை யோகேஸ்வரன் - கல்மடு, வவுனியா)

**லெப். ரஜீவன்** (தங்கராசா சுதாகரன் - அச்சுவேலி வடக்கு)

**திலகன்** (காசிலிங்கம் பிரபாகரன் - திருநெல்வேலி, யாழ்.)

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜர் ரட்ணம்** (சுப்பிரமணியம் யோகலிங்கம் - ஊரியான், முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி)

**லெப. கரன்** (தெய்வேந்திரம் சதாசிவம் - 115-ம் கட்டை, விவேகானந்தநகர், கிளிநொச்சி)

**லெப். அகிலன்** (பொன்னுத்துரை நற்கணேஸ்வரன் - உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி)

**லெப். மெண்டிஸ்** (பயஸ் ஜெயசீலன் - ரயில் நிலைய வீதி, மன்னார்)

**கபில்தேவ்** (வயிரமுத்து கமலநாதன் - 1-ம் குறிச்சி, பழுகாமம், மட்டக்களப்பு)

**2-ம் லெப் கனோஜி** (பாலகிருஷ்ணன் கமலநாதன் - புளியம்பொக்கணை பரந்தன், கிளிநொச்சி)

**சுந்தர்** (சித்திரவேல் கஜேந்திரராசா - 5-ம் வட்டாரம் சம்பூர், திருக்கோணமலை)

**ஆண்டவன்** (சிலுவைராசா ஜெயபாஸ்கரன்-மல்வம், உடுவில், சுன்னாகம்)

**நிக்கலஸ்** (நாகராசா சங்கர் - 1-ம் வட்டாரம், ஆலங்கேணி, கிண்ணியா, திருக்கோணமலை)

**நிக்கலஸ்** (கனகரட்ணம் விஜயன் - ஏறாவூர், மட்டக்களப்பு)

**நிக்கலஸ்** (சிவஞானம் சுரேஸ்குமார் - இரத்தினபுரம் கிளிநொச்சி)

**ரஜனி** (முத்துவேல் சவுந்தரராஜன் - 6-ம் வட்டாரம், சேனையூர், மூதூர், திருக்கோணமலை)

**2-ம் லெப். அசோக்** (மகாலிங்கம் இதயச்சந்திரன்- ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)

**குழந்தை** (யோண் ரட்ணம் அல்பிறட் பாலசிங்கம் - மயிலங்கூடல், இளவாலை)

**ஜலீம்** (முகமது இஸ்மாயில் மன்சூர் - இல. 20 ஏறாவூர், மட்டக்களப்பு)

**கலீல்** (வாசு - 49, காதர் வீதி, ஏறாவூர், மட்டக்களப்பு)

**றணீஸ் / ரணில்** (சிவலோகநாதன் சுஜீகரன்-இல-5, சுஜீகரன் வீதி, கல்வியங்காடு)

**மூர்த்தி** (தம்பிராசா அனிதராசா - வராத்துப்பளை, பருத்தித்துறை)

**சர்வேஸ்** (அருணாசலம் முருகன்- 261, கரும்புள்ளியான், வவுனிக்குளம், மாங்குளம் முல்லைத்தீவு)

**லிங்கேஸ்** (வெள்ளைத்தம்பி சதீஸ்குமார் - 6 ஆம் வட்டாரம், சாம்பல்தீவு, திருகோணமலை)

**சிவராஜ்** (தங்கத்துரை அன்ரனிதாஸ் - பீலியடி, கிண்

### நிர்வாகிகள் தெரிவு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

## தெரிவு

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு கடந்த 30ஆம் திகதி ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளது மாவட்ட கூட்டுறவு சமாச செயலாளர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திலேயே இத் தெரிவு இடம்பெற்றது.

தலைவர்: ம. சுந்தரலிங்கம், உபதலைவர்: ந. கில்மன், பொருளாளர்: ச. தவச்செல்வன் செயலாளராக பாக்கியநேசனும், நிர்வாக அங்கத்தவர்களாக தி. யேசுதாசன், மல்லிகாதேவி, மாலா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத் தலைமையகம்

## அறிவித்தல்

### வலி வடக்குப்பிரிவு ஒத்திவைக்கப்பட்ட வருடாந்த பொதுக்கூட்டம் 1992/1993

மேற்படி ஒத்திவைக்கப்பட்ட வலிவடக்குப்பிரிவு வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை(06-09-1992)காலை 9.30மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் வலிவடக்கு இடைக்கால நிர்வாகத் தலைவர் திரு. கே. நடராசா அவர்கள் தலைமையில் நடைபெறும். ஆகவே தகுதியுடைய அங்கத்தவர்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

73, கண்டி வீதி,<br>யாழ்ப்பாணம்,<br>31.08.1992 (சி-4977)

(ஏ. சீ. செபநாயகம்)<br>தலைவர்.<br>இடைக்கால நிர்வாகம்.

---

உ

பிள்ளையார் துணை

## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருஷம் ஆவணி மாதம் 17ஆம் நாள் (02-09-1992) புதன்கிழமை காலை 6.10 மணி தொடக்கம் 6.45 மணி வரையுள்ள சிங்க லக்கினமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

### எமது ஜேஷ்ட புத்திரன் திருநிறைச்செல்வன்

## கணேசன் அவர்களுக்கு

திருவருள் கொண்டு சிறுப்பிட்டி தெற்கு அருள்மிகு செல்வவினாயகர் தேவஸ்தானத்தில் வைத்து நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள் அவர்களினால் உபநயன பிரம்மோபதேசம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆவரங்கால்,<br>புத்தூர்.

இங்ஙனம்<br>சிவஸ்ரீ சி. சுந்தரதாசக்குருக்கள்,<br>தம்பதிகள்.

(3109)

---

முழுமூச்சாய் செயற்பட்டாய் புறமுதுகு காட்டாது<br>அன்னியனின் குண்டுபட்டு அழிந்ததையா உன்தேகம்<br>பொன்னான உன் உடலை கண்ணாலே பார்க்கவில்லை<br>கரன்

வீணாகாது உன் ஆசை விடியுமையா ஈழதேசம்<br>தன்மானத் தமிழனின் மண்மீட்பு எப்போதும்<br>உன்வழியில் தொடருமென உறுதியுரை பகன்றிடுவோம்

மது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திற்கும்<br>பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள்<br>உற்றார், உறவினர்கள்<br>நண்பர்கள்.

பாரதிபுரம்,<br>கிளிநொச்சி.

(3097)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 | 08 | 1926

மறைவு 01 | 09 | 1991

திருமதி

### லூர்து திரேசா பொன்னுத்துரை

3-ம் வட்டாரம் அல்லைப்பிட்டி

**திதி: 01-09-92**

ஆண்டுகள் ஒன்று மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் உள்ளங்களில் இருந்து நீங்காது உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,<br>பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,

இல 94, 4ம் குறுக்குத்தெரு<br>யாழ்ப்பாணம்.

(சி-4973)

---

சிவராஜ் (தங்கத்துரை அன்ரனிதாஸ் - பீலியடி, கிண்ணியா, திருக்கோணமலை)

அனங்கன் / சிங்கன் (கந்தையா சிங்கராசா-12-டி, யோகபுரம், மல்லாவி, மாங்குளம், முல்லைத்தீவு)

வித்தி (விஜயகுமார்-கிராஞ்சி, பூநகரி, மன்னார்)

சாள்ஸ் (வேலுப்பிள்ளை கந்தசாமி, இல-89, பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர், திருகோணமலை)

ரவி (உடையார் கட்டு, முல்லைத்தீவு)

மன்மதன் (வவுனியா)

சர்வேஸ் (ப, ரவிச்சந்திரன் - சாம்பல்தீவு, திருக்கோணமலை)

சுகுமார் (வீரன் அருணதேவன் - கல்மடு, வவுனியா)

அமலன் (சிவலிங்கம் சரத்சந்திரன்-குமுழமுனை, மணலாறு)

சிறி (செல்வநாயகம் புனிதராசா- ஆசிரேஸ் சதுக்கம் உவர்மலை, திருக்கோணமலை)

பிறேமசிறி (சதாசிவம் கோணேஸ்வரன் - நெடுங்கேணி, மணலாறு)

நேசன் (பொன்னுத்துரை கனகரத்தினம், 12 ஆம் கட்டை, விசுவமடு, முல்லைத்தீவு)

அசோக் (பாலச்சந்திரன் நதீந்திரன்- அளவெட்டி, தெற்கு)

திருக்கோணமலை / அல்லை -கந்தளாய்வீதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் பேணாட் (காளிக்குட்டி இரத்தினசபாபதி- புதுக்குடியிருப்பு, தம்பலகமம், திருக்கோணமலை)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மயிலம்மா வெளியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்- வாழைச்சேனை இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து, சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்படடு படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடன ன சமரில் வீரச்சாவெய்திய-

குரு (வயித்திலிங்கம் வசீகரன்- முத்தர் வளவு குப்பிளான்)

ஆகியோரை இந்நாளில்<br>நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4975)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

சட்டங்கள் சிலந்திக் கூடுகள் போன்றவை;
சிறிய ஈக்கள் சிக்கிக் கொள்ளும்,
பெரிய ஈக்கள் தப்பி விடும்.
— ஃபிரான்ஸிஸ் பேக்கன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# சிறிலங்காவில் அரசியற் புயல்?

சிங்கள அரசியல்வாதிகளினாலும், சிங்கள மக்களினாலும் ஆவலாகவும் அதேவேளை, முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கின் தீர்ப்பு இன்று வெளிவரலாம் என இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் வழக்கின் தீர்ப்பு எவ்வாறாக இருப்பினும், இதன் விளைவு தென்னிலங்கை அரசியலில் ஓர் புயலை உருவாக்கலாம். இதனால், அரசியல் நெருக்கடிகள் வலுவடையும் என்பதிலும் கேள்விக்கே இடமில்லை.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீது சிறிலங்காவின் சட்டம் மீதான இறுதி முடிவு எடுக்கும் அமைப்பான உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவுள்ளது. இதன் தீர்ப்பு இறுதியானதும், முடிவானதுமாகும். இதற்கப்பால் மேல் முறையீடு செய்வதற்கும் வாய்ப்பெதுவுமில்லை. 1972 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் பிரித்தானிய அரசுப் பேரவைக்கு (பிறிவிக் கவுன்சில்) மேல்முறையீடு செய்யும் முறை ஒழிக்கப்பட்டது.

இதேவேளை, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எவ்வாறு அமையினும் இதில் சம்பந்தபட்டுள்ள ஒரு பகுதிஅதனைக் குறை கூறும் என்பதிலும் சந்தேகமில்லை. அதிலும் எதிர்க்கட்சிகளுக்குப் பாதகமாக தீர்ப்பு வழங்கப்படுமானால் கண்டனக் கணைகள் தீவிரமாக எழக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு அவ்வாறு எழுவதற்கான அடிப்படை நியாயங்களும் உண்டு. சிறிலங்காவின் நீதித்துறை அரசியல் அமைப்புச் சட்டங்கள் மீது தீர்ப்பளிக்கும் அதிகாரம் கொண்டிருப்பினும், பிரதம நீதியரசர்களையும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் ஜனாதிபதி நியமிக்கவும், பதவி நீக்கவும் அதிகாரம் பெற்றுள்ளமையே இதற்குக் காரணமாகும். இக்குறைபாட்டை வெளிக்காட்டுவது போன்று இந்த ஜனாதிபதி ஆட்சேபனை வழக்கு விசாரணையில் ஈடுபட்ட நீதிபதிகள் குழுவில் நான்கு முறை ஜனாதிபதி பிரேமதாசாவால் மாற்றங்கள் செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம்.

இத்தீர்ப்பு எதிர்க்கட்சிகளுக்குச் சாதகமாக

# ஜனாதிபதித் தேர்தல் செல்லுபடியற்றதானால் ஜே. ஆர். பதவிக்கு வரலாமா?

பிரேமதாஸா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை செல்லுபடியற்றது எனக்கோரி வழக்குத்தாக்கலாயிருந்தமை அனைவரும் அறிந்ததே. இதற்கான தீர்ப்பு விரைவில் வெளிவர உள்ளது.

இதில் நீதிமன்றம் பின்வரும் மூன்று வகையான தீர்ப்புகளுள் ஏதாயினும் ஒன்றைத் தீர்க்கலாம்.

1. தேர்தல் குற்றச்சாட்டை நிராகரித்து பிரேமாவின் தெரிவு செல்லுபடியாகும் எனத் தீர்க்கலாம்.
அல்லது
2. பிரேமாவின் தெரிவு செல்லுபடியற்றது எனத்தீர்க்கலாம்.
அல்லது
3. தேர்தல் செல்லுபடியற்றது எனத் தீர்க்கலாம்.

சட்டப்படி பிரேமாவின் தெரிவு செல்லுபடியற்றதெனத் தீர்மானிக்கப்படக் கூடியதாய் இருந்தாலும், கூட நீதிபதி தனது தற்துணிபு அதிகாரத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கக்கூடிய ஏதுங்கள் உண்டு. யுத்தகாலம், அல்லது கொந்தளிப்பான காலங்களில் அரசியற் சட்டத்தை வரிக்கு வரி நடைமுறைப்படுத்த முடியாது என உலகின் பல பாகங்களிலும் இதற்கு முன்நடந்த இது போன்ற நிகழ்வுகளை உதாரணங் காட்டி தனது தற்றாதுணிபு அதிகாரத்தை பிரயேகித்து நீதிபதி ஜனாதிபதியை நியாயப்படுத்தலாம். இரண்டாம் உலக மகா யுத்த சூழலில் இலங்கையில் 11 வருடங்கள் அரசாங்க சபைக்கான தேர்தல் நடைபெறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய மூவகைத் தீர்ப்புகளுள் முதலாவது வகைத் தீர்ப்புத் தீர்க்கப்படுமாயின் அரசியல் சிக்கல் எழமாட்டாது இரண்டாவது அல்லது மூன்றாவது வகைத் தீர்ப்புக்களைத் தீர்த்தால் பெரும் அரசியல் சிக்கல்கள் எழும். எனவே இரண்டாவது அல்லது மூன்றாவது வகைத் தீர்ப்புத் தீர்க்கப்பட்டால் அரசியல் அமைப்பிலும், நாட்டிலும் எழக்கூடிய சிக்கல்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

இரண்டாவது வகையிற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரேமாவின் வெற்றி மட்டுமே செல்லுபடியற்றது எனத் தீர்ப்பளித்தால் இரண்டாவதாக அதிகப்படியானவாக்குகளைப் பெற்ற சிறிமா பண்டாரநாயக்கா விருப்பத் தேர்வு வாக்குகளின் மூலம் ஜனாபதியாகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவரா எனப் பரிசீலிக்கலாம். அதன் மூலம் சிறிமா ஜனாதிபதியாகலாம். ஆனால் பாராளுமன்றத்தில் ஐ. தே. க. பெரும்பான்மைப்பலம் பெற்ற கட்சி என்ற வகையில் சிறிமாவுக்குப் பெரும் சங்கடங்களைக் கொடுக்கும். அப்படியான ஒரு கட்டத்தில் சிறிமா பாராளுமன்றத்தைக் கலைக்கவே முடிவெடுப்பார். நாட்டில்பெரும்அரசியல்குழப்பங்கள் ஏற்படும். பிரேமாவின் ஆதரவாளர்களும் கைகட்டிப்

**சாரணன்**

பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. தென்னிலங்கையில் இரத்தக் களரிக்கான வாய்ப்புண்டு.

இரண்டாவது வகையான தீர்ப்பல்லாமல் மூன்றாவது வகையான தீர்ப்பாகிய தேர்தல் செல்லுபடியற்றது எனத் தீர்க்கப்பட்டால் ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகி விடும்.

அப்போது பிரதமர் பதில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்று மூன்று மாத காலத்துள் தேர்தலை நடாத்த வேண்டும்.

ஜனாதிபதி முறைமை தனக்குப் பாதகமானதெனச் சு.க. நம்புவதாலும், பிரேமாவீழும் பட்சத்தில் ஐ.தே.க.வுக்குள் எழும் பதவிப் போட்டி காரணமாகவும் தேர்தல் நடாத்தாது ஜனாதிபதி முறைமையை இரு கட்சிகளும் இணைந்து ஒழிக்க வாய்ப்புண்டு.

பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்புத் திட்டத் திருத்தம் ஒன்றை கொண்டு வந்து (மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன்) இவ்விரு கட்சிகளும் இணைந்து ஜனாதிபதி முறைமையை ஒழிக்கலாம்.

பொதுவாக ஜனாதிபதி முறைமை பாதகமானதென்ற கருத்து சு.க.விடமும், லலித்-காமினி தலைமையிலான ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியிடமும் இடதுசாரிகளிடமும் உண்டு. ஜனாதிபதி முறைமையைக் கொண்டு வந்த ஜே. ஆர் கூட ஜனாதிபதிமுறைமை பரீட்சார்த்தமானதென்றும், அது பாதகமானதாயின் ஒழிக்கப்படலாம் என்றும் ஓராண்டிற்கு முன்பு கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டால் ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ரிசந்தர்ப்பம் தமக்குக் கிடைக்காமற் போகலாம் என சு. க. வும், பதவிப் போட்டியில் ஈடுபட்டுள்ள ஐ. தே. க. வினரும் கருதலாம் என்பதால் ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவே பொதுவாக விரும்புவர். இவ்வாறு செய்வது அரசியலில் ஜே. ஆரின் விருப்பங்களுக்கும் சாதகமாய் அமையும். ஐ. தே. க. வில் ஜே. ஆரைத் தவிர, வேறு யாராலும் ஐக்கியத்தைப் பேண முடியாது என்ற நிலை காணப்படும் சூழலில் ஜே. ஆருடன் உடன்பாட்டிற்குப் போவதைத் தவிர ஜனாதிபதி முறையை ஒழிக்க முடியாதென சு. க. கருதுமிடத்தில் பின்வருமாறு சு. க. ஓர் உடன்பாட்டிற்குப் போக வாய்ப்புண்டு.

அதாவது அரசியல் அமைப்புத் திட்ட ரீதியில் ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவும், அதேவேளை பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடாத்த வேண்டும் என்றும் அவ்வாறு தேர்தல் நடாத்தும் வரை ஜே. ஆர். காபந்துப் பிரதமராக இருக்கலாம் எனவும் உடன்பாட்டிற்கு வர முடியும்.

இப்படித்தான் இது நடக்கும் என்று கூறுவதல்ல இதன் நோக்கம். ஆனால் பிரேமா பதவி கவிழ்ந்தால் இப்படியும் நடப்பதற்கான ஒரு வாய்ப்புண்டு என்பதைச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

நன்றி: சாளரம்

# சுவிற்சர்லாந்தில் அகதிகள் தஞ்சம்; இலங்கை இரண்டாவது இடம்

சுவிஸில் விகிதாசார ரீதியாக அண்மைக் காலங்களில் கிடைக்கும் விபரங்களின்படி இலங்கை அகதிகள் இரண்டாவது பெரிய குழுவினராக உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1992 யூலையில் சுவிஸ் வந்த அகதிகள் 1251 பேர் என்றும் இவர்களில் இலங்கையர் 316 என்றும் புள்ளிவிபர தகவல் குறிப்பிடுகிறது. யூகோசிலாவியர் 289, துருக்கியர் 115, மற்றைய நாடுகள் 531. 1992 இல் அகதிகளின் வருகை குறைந்துள்ள போதும், இலங்கை அகதிகளே அதிலும் முக்கிய குழுவினராக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் அரசியல் தஞ்சம் கோரியோரின் எண்ணிக்கை பின்வருமாறு இருக்கிறது.

| ஆண்டு | தஞ்சம் கோரியோர் |
|---|---|
| 1988 | 6,726 |
| 1989 | 24,425 |
| 1990 | 38,836 |
| 1991 | 41,629 |
| 1992 | 11,231 (ஜனவரி-யூலை) |

1991இல் அரசியல் தஞ்சம் கோரிய 41,629 பேர்களை நாடுகளின் அடிப்படையில் விகிதாசார ரீதியாக நோக்கின்,

| நாடுகள் | வீதம் |
|---|---|
| யூகோசிலாவியா | 34·1 |
| இலங்கை | 17.7 |
| துருக்கி | 10.4 |
| ருமேனியா | 6 4 |
| ஏனையவை | 31.4 |

ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் சுவிஸில் 69 பேர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். ஆனால் இந்த விகிதாசாரம் ஆஸ்திரியாவில்10,000: 35 என்றும், ஜேர்மனியில்

...ளப்பட்ட சனத்தொகைகணிப்பீட்டின்படி 11,82,489 வெளிநாட்டவர்கள் சுவிஸில் வாழ்கின்றனர். இதில். சர்வதேச அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள். பருவகால அடிப்படையில் வாழ்பவர்கள், அரசியல் தஞ்சம் கோரியோர் இதில் உள்ளடக்கப்படவில்லை.

அத்துடன் வெளிநாட்டவர்களால் வேலையின்மை நெருக்கடியும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுவிஸின் வரலாற்றில் ஆகக்கூடிய வேலையின்மை வீதம் 1939 இல் இரண்டாவது உலக யுத்த காலத்தில் காணப்பட்டது. இந்த ஆண்டு அந்த நிலையை சுவிஸ் அடையலாம் என எதிர்பார்ப்பதாகவும், 1992 யூலையில் எடுக்கப்பட்ட விபரங்களின்படி 90,152 பேர் வேலையின்றி உள்ளனர்.

# தனிநாயகம் அடிகளின் தமிழ்ப்பணி

தமிழின் தனிச் சிறப்புகளை அனைத்துலகமும் நன்கு அறியச் செய்த பெருமை தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளாருக்கே உரியது.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தமிழை நன்றாகத் தரணியில் பரப்புதற்கே''

என்ற குறிக்கோளுடன் இவர் தமிழுக்காக அயராது உழைத்தார்.

''அடிகளார் இரண்டு முக்கிய தொண்டுகளை ஆற்றினார். அந்த இரண்டையும் பொறுத்து அவரைவிடப் பிறர் கூடுதலாகத் தொண்டாற்றியுள்ளனர். என்று கூறமுடியாது.''

ஒன்று தமிழியல் என்னும் துறை உருவாகவும், அது பற்றிய அறிவு ஆங்கிலம் வழியாகச் சர்வதேச அறிஞர்களை அடையவும் தொண்டாற்றினார். தமிழியலைச் சர்வதேச அறிவுத்துறையாக உயர்த்தினார். 'இதற்கு முதன் முறையாக ஆங்கிலத்திலே தமிழ்ப்பண்பாடு பற்றிய சஞ்சிகையை (Tamil Culture) தொடக்கி நடத்தினார். பல நாடுகளுக்குச் சென்று தமிழ் பற்றி விரிவுரைகள் நடத்தினார். தமிழாராய்ச்சிக்கென்று

## இன்று அடிகளாரின் 12வது நினைவு தினமாகும்

உலக நிறுவனம் ஒன்றை அமைத்து சர்வதேச மாநாடுகள் நடை பெற உதவினார்.

ரம் பெற்றுள்ளமையே இதற்குக் காரணமாகும். இக்குறைபாட்டை வெளிக்காட்டுவது போன்று இந்த ஜனாதிபதி ஆட்சேபனை வழக்கு விசாரணையில் ஈடுபட்ட நீதிபதிகள் குழுவில் நான்கு முறை ஜனாதிபதி பிரேமதாசாவால் மாற்றங்கள் செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம்.

இத்தீர்ப்பு எதிர்க்கட்சிகளுக்குச் சாதகமாக அமைந்தால் திரு.பிரேமதாசா பதவிவிலகவேண்டி வரும், அடுத்த ஒரு தேர்தலுக்கும் இது வழிவகுக்கும். அத்தோடு ஐ. தே. கட்சிக்குள் குழப்பங்களும் நிகழலாம். இதேவேளை பிரேமதாசா சார்புக் குழுவினர் பெரும் கலகங்களில் இறங்கக் கூடும். ஆனால், திரு. பிரேமதாசா வெற்றி பெறுவாரானால், எதிர்க்கட்சிகளையும், ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே தனக்கு விரோதமான போக்குடையவர்களை ஒடுக்குவதிலும், களை எடுப்பதிலும், தீவிர கவனம் செலுத்துவார் என்பதிலும் ஐயம் இல்லை. சிலவேளை திடீர் தேர்தல் அறிவிப்புக்கள் கூட வரலாம்.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெறுமேயானால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை நிறுத்துவதற்கு தீவிரமாகப் பாடுபடும். இதேவேளை தோல்வி அடையுமானால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாட்டில் குழப்பத்தை விளைவிக்கலாம். இதற்கான சூழ்நிலைகளும் கனிவடைந்துள்ளன. கலகம் விளைவிப்பதில் சில அனுபவங்களை சுதந்திரக் கட்சியும் அண்மைக் காலத்தில் பெற்றுள்ளது. அதோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உடைவுகளும், எதிர்க்கட்சிகளுக்கிடையில் புதிய கூட்டணிகளும் உருவாகக் கூடும்.

இந்நிலையில் இவ்வாறாக ஓர்அரசியல் புயலை உருவாக்கக் கூடிய ஓர் நீதிமன்றத் தீர்ப்பை சிறிலங்காவில் உள்ள அரசியற் கட்சிகள் எவ்வாறு கையாளப் போகின்றன என்பதே இன்று சகலர் மத்தியிலும் எழுந்துள்ள கேள்வியாகும். இது குறித்து கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் பெரும் குழப்பமடைந்துள்ளன.

வன்முறை கலாசாரம் தீவிரமாகப் பரவி வரும் வேளையிலும், அதற்கு அரசியற் கட்சிகளும் போதிய ஊக்கமும், ஒத்தாசையும் அளித்துவரும் நிலையிலும் தேர்தல் தீர்ப்புக் குறித்து அரசியல் விமர்சகர்களும், பத்திரிகைகளும் கலக்கமடைந்து போயுள்ளமை நியாயமானதே. ஆனால் சிறிலங்காவில் இன்று நிகழும் அதிகாரப்போட்டியும், அதனால் விரிவடைந்து வரும் வன்முறையையும் யார் நினைத்தாலும் தடுத்து நிறுத்துவது கடினம். ஏனெனில் இது சிறிலங்காவின் யதார்த்தம் ஆகிவிட்டது.

கை அகதிகளே அதிலும் முக்கிய குழுவினராக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் அரசியல் தஞ்சம் கோரியோரின் எண்ணிக்கை பின்வருமாறு இருக்கிறது.

| ஆண்டு | தஞ்சம் கோரியோர் தொகை |
| --- | --- |
| 1987 | 10,913 |

ஏனையவை 31.4

ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் சுவிஸில் 69 பேர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். ஆனால் இந்த விகிதாசாரம் ஆஸ்திரியாவில்10,000:35 என்றும், ஜேர்மனியில் 10,000:33 ஆகவும் உள்ளது.

1992 ஏப்ரலில் மேற்கொள்

யுத்த காலத்தில் காணப்பட்டது. இந்த ஆண்டு அந்த நிலையை சுவிஸ் அடையலாம் என எதிர்பார்ப்பதாகவும், 1992 யூலையில் எடுக்கப்பட்ட விபரங்களின்படி 90,152 பேர் வேலையின்றி உள்ளனர். வேலையின்மை வீதம் 2:9 ஆக உள்ளது.

# நடராஜன், சுவாமியினது ஆசைகள் இந்நூற்றாண்டில் மிகப்பெரும் ஜோக்

**- ஜெயலலிதா**

(சென்னை)

தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக வருவதற்கு நடராஜனுக்கு இருக்கும் ஆசையும் இந்தியாவின் அடுத்த பிரதமராக வருவதற்கு சுப்பிரமணியம் சுவாமிக்கு இருக்கும் ஆசையும் இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய 'ஜோக்' என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இதனை அவர் தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் முன்னாள் உதவியாளரான எம். நடராஜன் ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியுடன் சேர்ந்து அதிமுக,விற்குள் அதிருப்தியை உருவாக்கவும், பிளவை உண்டுபண்ணவும் மேற்கொள்வதாகக் கூறப்படும் முயற்சி குறித்து நிருபர்கள் கேட்ட போதே ஜெயலலிதா இவ்வாறு பதில் அளித்தார்.

தனிப்பட்ட ரீதியிலோ அல்லது கூட்டாகவோமேற்கொள்ளப்படக்கூடியஅத்தகையஎந்தவொரு முயற்சியும் பலன்தரப் போவதில்லை.

எனது தனிப்பட்ட காரணங்களுக்காக நான் அரசியலில் இருந்து விலகத் தீர்மானித்தாலன்றி இந்த அரசாங்கத்தை கவிழ்க்கவோ ஆட்சியை உடைக்கவோ எவராலும் முடியாது. அது சாத்தியமானதொன்றல்ல. அத்துடன் நான் இருக்கும் வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தை எவராலும் பிளவு படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளோடு

## ஜெயலலிதா தொடர்புபற்றி வாழப்பாடிக்கும் சந்தேகம்

(சென்னை)

''விடுதலைப்புலிகளுக்கு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நிதியுதவி வழங்கினார்'' என்று ஜனதா கட்சித்தலைவர் சுப்பிரமணியம் சுவாமி விடுத்திருக்கும் அறிக்கைக்கு முதலமைச்சர் மறுப்பு விடுத்திருக்கின்ற போதிலும் இது விடயத்தில் அவரது சம்பந்தம் பற்றிய சந்தேகங்களும் இருக்கின்றன என்று தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் இரகசிய முயற்சிகள் தொடர்பாக முதலமைச்சர் வெளியிட்ட சந்தேகங்களில் சிலஉண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன என்றும்,

மாநிலத்தில் அ. தி. மு க. அரசைக் கவிழ்க்க மேற்கொள்வதாகக் கூறப்படும் முயற்சிகளில் காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்கு எதுவித பங்குமில்லை என்றும்,

இத்தகைய முயற்சிகளுக்கு காங்கிரஸ் தலைமைப்பீடத்தின் மறைமுக ஆசீர்வாதம் இருக்கிறது என்ற சந்தேகத்தில் எந்த தர்க்கமோ, அர்த்தமோ இல்லை என்றும் பதில் அளித்தார்.

## இந்தியா ஹெலி தயாரிப்பு

இந்தியாவில் 14 பேர் அமர்ந்து செல்லக்கூடிய உலங்கு வானூர்தியொன்று தயாரிக்கப்பட்டு பறக்க விடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இது ''இந்துஸ்தான் ஏரோடிக்'' நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டது. ஏற்றுமதித் தரம் உடையது. எதிர்காலத்தில் இது விமானக் கண்காட்சிகளில் பங்குபற்றும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று அடிகளாரின் 12வது நினைவு தினமாகும்

உலக நிறுவனம் ஒன்றை அமைத்து சர்வதேச மாநாடுகள் நடைபெற உதவினார்.

இரண்டாவது உலகின் மூலைமுடுக்குகளில் எல்லாம் வாழும் தமிழரைப்பற்றி ஆய்வு நடத்தி அங்கெல்லாம் உலகத் தமிழர் பற்றிய அறிவை வளர்த்தார். இவையே இவரை ஒரு தனித்துவமான தமிழ்ப் பெரியாராக மாற்றி வைத்துள்ளன.

நெடுந்தீவில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், பின்னர் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிலும், மேற்படிப்பினை ரோமிலும் மேற்கொண்டார்.

ரோமில் இணைந்து தமிழகம் சென்று தமிழ் மொழியைக் கற்றார் இதன் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று தமிழில் கலை இளவல் சிறப்பு(ப்பட்டம்) பெற்றார்.

1952இல் கொழும்பில் ''தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்'' என்ற பெயரில் கழகம் அமைத்து செயற்பட்டார்.

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அதனை எதிர்த்து இடம் பெற்ற சத்தியாக்கிரகத்திலும் பங்கு பற்றியதோடு, ''தமிழ் மொழி உரிமைகள், என்ற தலைப்பில் ஆங்கில நூல் ஒன்றையும் வெளியிட்டார்.

1961இல் மலேசியாப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இவர் இருந்த போது தமிழை கீழைத்தேயவியல் என்ற பரந்த வட்டத்திற்குள் வைத்து ஆராய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டார்.

1964இல் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தைத் தொடக்கி 1966இல் மலேசியாவில் முதலாவது மாநாட்டை கூட்டுவதற்குமுயற்சிகள் எடுத்தார்.

1968இல் இரண்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடும் கருத்தரங்கும் சென்னையிலும், 1970இல் பாரிசிலும் நடைபெற சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கியவர் தனிநாயகம் அடிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியப் பல்கலைக் கழகத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இலங்கை வந்து 1972இல் இலங்கையில் நடைபெற உத்தேசிக்கப்பட்ட தமிழாராய்ச்சி மாநாட்டிற்கான முன்னோடிக் கருத் ரங்கினை 1970 இல் கூட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இந்த மாநாட்டை நடத்துவதற்கு பெரும்முயற்சி எடுத்தார்.யாழ்ப்பாணத்தில் இந்த மாநாட்டை நடத்த இவர் பெரும் தொண்டாற்றினார் என பல பத்திரிகைகள் இவருக்கு புகழாரம் சூட்டின. இந்த மாநாட்டில் 15,000 க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டதனால் பெரிதும் துன்பம் அடைந்த தனிநாயகம் அடிகளார் சிறிது காலம் அமைதியாக இருந்தார். பின்பு நோய் வாய்ப்பட்டு பொது நிகழ்ச்சிகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டார் 1980 ஏப்ரலில் தந்தை செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவுகளை மூன்று நாட்களும் 1980 மே-இல் திருக்குறள் மாநாட்டிலும் கலந்து உரையாற்றினார். இதன் பின்னர் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் திகதி இவர் காலமானார்.

இவ்வாறாக தமிழ்த்தொண்டுக்கு இவர் ஆற்றிய பணிகளால் தமிழ் வாழும் காலம் முழுவதும் தாம் வாழும் தனிப் பெருமையை தனிநாயக அடிகளார் பெற்றார்.

ஈழநாதம்

# ஜேர்மன் அகதிமுகாம் மீது தீவிர வலதுசாரிகள் தாக்கு

## 65 பொலிசார் காயம்

கிழக்கு ஜேர்மன் நகரான ரொஸ்டொக்கில் தொடர்ந்து அகதிகள் முகாம் மீது வலதுசாரித் தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தி வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் இதுவரை 65 பொலிசார் காயமடைந்துள்ளனர். இதில் 58பேரைபொலிசார் கைது செய்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற இரவு நேர உதைபந்தாட்டப் போட்டியொன்றின் பின் கைவிடப்பட்ட வெளிநாட்டு அகதிகள் விடுதியொன்றின் மீது வலதுசாரித் தீவிரவாதிகள் கடும் கல்லெறித் தாக்குதல் நடாத்தினர். போத்தல்களும் முகாமை நோக்கி வீசப்பட்டன.

700 கலகக்காரர்களை வீதியில் இருந்து விரட்ட 1000ற்கு மேற்பட்ட பொலிசார் கண்ணீர்ப் புகையையும், நீர்ப்பாய்ச்சிகளையும் உபயோகித்து 4 மணி நேரம் போராடினர் கைதுசெய்யப்பட்டவர்கள் ஜேர்மனியின் சகல பகுதிகளையும் சேர்ந்தவர்களாவர். மேலும் இக்கலகம்தொடர்ந்து நீடிக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

ரொஸ்டொக் நகரே ஜேர்மனியின் சகல பகுதிகளையும் சேர்ந்த வலது சாரித் தீவிரவாதிகள் ஒன்று கூடும் இடமாகும். அனுபவம் வாய்ந்த கலகத் தடுப்புப் பொலிசாருக்குக் கூட கலகத்தின் கொடூரம் அதிர்ச்சியளிப்பதாய் இருந்தது. கலகம்ஆரம்பித்ததுமுதல் இது வரை 250 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானோர் குற்றம் தாக்கல் செய்யப்படும் வரை விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் கடந்த திங்கட்கிழமையன்று இடம்பெற்ற தாக்குதலில் பல அகதிகளும், டெலிவிசன் குழு ஒன்றும் மயிரிழையில் உயிர்தப்பியதாகத்தெரியவருகிறது

# இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம் தோல்வி கன்டு விட்டது

## - ஐ. கே. குஜ்ரால்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண 1987 ஆம் ஆண்டு இந்தியா - சிறிலங்கா உடன்படிக்கை தவறிவிட்டது. அந்த உடன்படிக்கை இப்போது செல்லுபடியாகாது. இனப்பிரச்சினைதொடர்பாகஇன்று செல்லுபடியாகக் கூடியது சிறிலங்கா அரசியல் யாப்பில் இணைக்கப்பட்ட ஷரத்துக்களாகும். என்று இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை மத்திய அமைச்சர் இந்தர் குமார் குஜ்ரால் தெரிவித்திருக்கிறார்.

யுத்தத்துக்குப் பின் ஏற்பட்டுள்ள கெடுபிடியான காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்களினால் பிரதமர் ராஜிவ் காந்திக்கும் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவுக்குமிடையில் ஜூலை 29, 1987இல் பரிமாறப்பட்ட கடிதங்களின் வாசகங்கள் ஒவ்வாததாகி விட்டனஎன்றும் அவர் சண்டே ஒப்சேபருக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அந்தப்பேட்டியில்சிறிலங்கா மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்க்கவேண்டும் என்பதை இந்திய சமூகம் விரும்புகிறது வடக்கையும், கிழக்கையும் இணைக்க வேண்டுமா இல்லையா என்பதினையும் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேசுவது குறித்தும் சிறிலங்கா தான் தீர்மானிக்க வேண்டும் என்றும் -

இந்திய உப கண்ட நாடுகளின் பாதுகாப்பு அப் பிரதேசத்தின் பாதுகாப்புடன் தொடர்புடையது என்பதினை இந்திய உபகண்டத்திலுள்ள நாடுகள் மறக்கக் கூடாது பாதுகாப்பை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வை எவரும் மறந்து விடக்கூடாது என்றும் -

இன்றைய காங்கிரஸ் ஆட்சி ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரானதல்ல இந்தியா - சிறிலங்கா உறவில் கடந்தஇரண்டு வருடங்கள் விருத்தி ஏற்பட்டுள்ளது நவம்பர் 1991 சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று பிரதமர்நரசிம்மராவ் எடுத்த முடிவு பிழையானது அது சார்க் அமைப்பைப் பலவீனப்படுத்தி விட்டது அப்போதிருந்த இந்திரா காங்கிரஸ் ராஜிவ்காந்தி அரசைப் போன்றதல்ல இன்று ஆட்சியிலுள்ளகாங்கிரஸ் அரசு அந்தப் பரம்பரை இப்போது ஆட்சியில் இல்லை புதுடில்லியில் அதே பேர் வழிகள் இப்போது அதிகாரத்தில் இல்லை என்றும் அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்

மேலும் சிறிலங்கா அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையை வரவேற்ற இந்தர் குமார் குஜ்ரால் திறந்த பொருளாதாரத்தை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்று சர்வதேச செலவாணி நிதியமும் உலக வங்கியும் நெறிப்படுத்துவதைக் கண்டித்தார்.

1987ல் இந்தியப் படையை சிறிலங்காவுக்கு அனுப்பிய சமயம் அதனை எதிர்க்கட்சியினர் எதிர்த்ததை நியாயப்படுத்திய குஜ்ரால், சிறிலங்கா ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் இந்திய அரசு இந்தியப்படையை மீள அழைத்ததை வரவேற்றார்.

### கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

ஆண்டு ஒன்பது வரலாற்றுத் துறை நூல் வெளியிடுத தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு கல்வி திணைக்களத்தில் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது இதில் சகல சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களும் தனியார் பாடசாலைகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியும் கலந்து கொள்ளுமாறுயாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### எண்ணெய் விநியோகம்

(மானிப்பாய்)

பருத்தித்துறை வீதி பலாலி வீதிச்சந்திக்கருகாமையில் பொதுமக்களுக்கு தலா 5லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இம்மண்ணெண்ணெய்விநியோகமானது ஒவ்வொரு பங்கீட்டு அட்டைக்கும் லீற்றர் 30/- வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. (07)

# சோமாலியாவிற்கு மேலும், 3000 ஐ. நா. படைகள்

(நியூயோர்க்)

சோமாலியாவில் பஞ்சத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கு உணவு விநியோக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் பொருட்டு ஐ நா. பாதுகாப்புச்சபை மேலும் மூவாயிரம் துருப்புக்களை அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கவேவே சோமாலியாவில் முந்நூறு பாகிஸ்தானிய துருப்புக்களும் ஐம்பது ஐ நா. கண்காணிப்பாளர்களும நிலைகொண்டுள்ளனர். மேலும் செக்கோஸ்லாவாக்கிய, எகிப்திலிருந்து கண்காணிப்பாளர்கள் வரவுள்ளனர்.

சோமாலியாவில் மனிதாபிமான உணவு விநியோக நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கென்று மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சோமாலியாவில் அண்மைக் கால கடும்வரட்சி பஞ்சத்தினால் சுமார் நாற்பத்தைந்து லட்சம் மக்கள் பாதிப்படைந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

# சு.க வில் பேர காமினி முயற்சி? பிரதமர் பதவியை எதிர்பார்ப்பு

லலித் காமினி குழுவினரின் தேசிய ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இருவருக்குள்ளும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விடையத்தை மறைப்பதற்கு இருவரும் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்ற போதும் கட்சித் தொண்டர்கள் மத்தியில் இவ் விடயம் தொடர்பாய் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் அண்மையில் சிறிமா அநுரா சந்திரிக்கா ஆகியோர் கலந்து கொண்ட சிறிமா குடும்ப சந்திப்பொன்றிற்கு காமினி அழைக்கப்பட்டுள்ளார் இச் சந்திப்பு நள்ளிரவு வரை நீடித்துள்ளது காமினி சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணையலாம் என எதிர்பார்க்கப் படும் அதே சமயம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்தலில் வெற்றி பெறின் பிரதமர் பதவியை காமினி எதிர் பார்ப்பார் எனவும் கூறப்படுகின்றது.

# 11 வயதுச் சிறுமி கொலை 17வயது இளைஞன் கைது

(தென்மராட்சி)

பதினொருவயதுச் சிறுமியை 17 வயது இளைஞன் ஒருவன் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியபின் சிறுமி அணிந்திருந்த தங்கநகைகளை பிடுங்கிவிட்டு கழுத்தை நெரித்துப் படுகொலை செய்த கொடூரச் சம்பவமொன்று சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த செல்வி சகீலா கந்தசாமி (வயது 11) என்ற சிறுமியே இச்சம்பவத்தில் பரிதாபகரமாகப் பலியானவராவர். இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் மாலை ஆறுமணியளவில் மேற்படி இளைஞன் வயலில் வேலை ... அங்கு சென்றுள்ளார். வயலுக்கு அருகேயுள்ள காட்டுப் பகுதியில் எரு இருப்பதாகவும் தனியே வந்தால் எடுத்துத்தருவேன் என சிறுமியை ஏமாற்றி தோழியைத் துரத்திவிட்டு காட்டுப்பகுதிக்குள் சிறுமியைத் தனியே அழைத்துச் சென்று அங்குவைத்தே இந்த இளைஞன் பாலியல்வன்முறைக்கு உட்படுத்தியபின் கொலைசெய்துள்ளார். சிறுமி அணிந்திருந்த மோதிரம், தோடு ஆகிய தங்கநகைகளும் இவரால் பிடுங்கப்பட்டுள்ளன இச்சம்பவம்பற்றி விசாரணை நடத்திய வைத்திய அதிகாரி டாக்டர் என். அருள்லிங்கம் மரணவிசாரணைஅதிகாரிதிரு. ல. தர்மேந்திரன் ஆகியோர் பாலியல்வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பின் கொலை

# கடற்படைத் தளபதி திருமலை சென்றார்

(திருமலை)

திருமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பஸ்குண்டு வெடிப்பு சம்பவத்தை நேரில் பார்வையிடுவதற்காக சிறிலங்கா கடற்படைத்தளபதி நேற்று திருமலைக்கு விஜயம் செய்தார். இவர் குண்டு வெடித்த இடத்தையும் இக் குண்டு வெடிப்பால் ஏற்பட்டுள்ள சேத விபரங்களையும் பார்வையிட்டதுடன் மேற்படி சம்பவத்தில படுகாயமடைந்து திருமலை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பிரயாணிகளையும் நேரில் சந்தித்து உரையாடினார்.

### உலகசாதனை

அதனை ஆட்சேபித்துத் தொடர்ப்பட்ட வழக்குத் தொடரபான செய்தியொன்றை ஜூலை 1 - 1992 திரைம்ஸ் ஒவ் இங்கிலென்ட் பத்திரிகையில் தான் படித்ததாகவும் அவர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி தேர்தல் செல்லுபடியாகாது என்றும், இத் தேர்தலில் பல முறைகேடுகள் நடந்ததாகவும் குற்றம்சாட்டி ஜனவரி 9-1989 இல் உச்ச நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு மீதான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஜூலை 1 - 1992

# தொண்டர் ஆசிரியருக்கு விரைவில் நியமனம்

வடபகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட தொண்டர் ஆசிரியர் கட்கு விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளதாய் வடக்கு, கிழக்கு மாகாண சபை கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது

### 5 வருடத்தில்

களுக்குப் பாவிப்பதையே ஏற்புடைய உச்ச சதவீதமாகசர்வதேச நாணய நிதியம் கருதுகிறது ஆனால் சிறிலங்கா அரசு கடந்தஐந்து வருடகாலப்பகுதியில [1987-1991] 56 பில்லியன் ரூபாவை இராணுவததுக்கென செலவு செய்துள்ளது. இது வருடம் ஒன்றுக்குச் சராசரி 11 பில்லியன் ரூபாவாகும் கடந்த வருடம் எபபோதும் இல்லாத வகையில் சிறிலங்கா அரசு 17 பில்லியன் ரூபாவை செலவுசெய்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. இத தொகை குறைத்துக்காட்டப்பட்ட செலவீனங்களாகத்

### விண்ணப்ப

யில் தேறியவர்களுக்கான நியமனங்கள் பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக விரைவில் வழங்கப்படும் என பொது நிர்வாக மாகாண உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மேலும் ஒருவார உலருணவு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகாரணமாக இடம்பெயர்ந்த மக் ... கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் அரச அதிபர் ஈடுபட்டுவருகிறார் இதற்கான

### அகதிகள்

சென்னை நீதிமன்றம் முன்னர் விடுத்த அறிக்கையை நீதியரசர் சிறினிவாசன் கடந்த வியாழக்கிழமை கிழமை மாற்றியமைத்த பின்னரே இந்த அகதிகளைதிருப்பி அனுபபும நிகழ்வு நேற்று இடம் பெற்றது இதற்கு எதிராக மீண்டும்மனுப்பண்ணபாட்டாளிகள் மக்களகட்சியும் தமிழர் தேசிய இயக்கமும் முனைந்துள்ளனர்.

என்றும், இத் தேர்தலில் பல முறைகேடுகள் நடந்ததாகவும் குற்றம்சாட்டி ஜனவரி 9-1989 இல் உச்ச நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு மீதான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஜூலை 1 - 1992 ஒத்திவைத்தது இந்த வழக்கு மீதான விசாரணை 453 நாள்கள் நடைபெற்றன.

(வயது 11) என்ற சிறுமியே இச்சம்பவத்தில் பரிதாபகரமாகப் பலியானவராவர். இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் மாலை ஆறுமணியளவில் மேற்படி இளைஞன் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபொழுது எருப்பொறுக்குவதற்கென தனது தோழியுடன் இச்சிறுமி இவரால் பிடுங்கப்பட்டுள்ளன இச்சம்பவம்பற்றி விசாரணை நடத்திய வைத்திய அதிகாரி டாக்டர் என். அருள்லிங்கம் மரணவிசாரணைஅதிகாரிதிரு. ல. தர்மேந்திரன் ஆகியோர் பாலியல்வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பின் கொலை என தீர்ப்புவழங்கினார் பிரஸ்தாப இளைஞர் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். 35

## இளாலியில்

சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ் விமானக் குண்டு வீச்சினால் படகும் பலத்த சேதமடைந்துள்ளதாக அறியவருகிறது. (ச)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மேலும் ஒருவார உலருணவு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகாரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மேலும் ஒரு வாரகால உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

இதற்கானமுயற்சியை யாழ் செயலகம் எடுத்துவருகிறது இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான தகவல்கள்திரட்டப்பட்டு நிரற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அத்துடன் மேற்படி உலர் உணவு விநியோகத்தைத் தொடங்குவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் அரச அதிபர் ஈடுபட்டுவருகிறார் இதற்கான அநுமதி விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

## 40 தமிழ்

வாழ்ந்து வருகின்றனர் என்றும்,

கோமாரி, திருக்கோவில், அக்கரைப்பற்று ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாம்களிலும் இவர்களில் சிலர் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இக் குடும்பங்களின் இருப்பிடம், உடைமை ஆகியவற்றுக்கு என்ன நேர்ந்தது, சேதங்களின் பெறுமதி என்ன என்ற விபரமும் முழுமையாக இதுவரை திரட்டப்படவில்லை என்றும், திரட்டமுடியாதுள்ளதுஎன்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இக் கிராமத்தில் வாழ்ந்த மா. அரசரெத்தினம், ச. தருமரெத்தினம் ச. பாக்கியராஜா, சி சின்னையா, திருமதி எஸ். குஞ்சுத்தம்பி ஆகியஐவருக்கும் என்னஆனது என்பதை உறவினர்கள் இன்னும் அறிந்து கொள்ள முடியாதிருக்கிறது என்றும், இக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் தொழில் செய்ய முடியாத நிலையில் பிச்சை எடுத்தும் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## அக்கரைப்பற்று

கரை பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரம் படுத்தப்பட்டுள்ளதாகவும், கடலிலும் துப்பாக்கிப்பிரயோசத்தங்கள் கேட்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட வெளியிடங்களில் இருந்து நெல் அறுவடை வேலைகளுக்கு தொழிலாளர்கள் வராத காரணத்தினால் மாவட்டத்தின் கரையோரப் பகுதியிலுள்ள நெல் வயல்களில் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதோடு மிகவும் கூடுதலான பணத்தைக் கொடுத்து அறுவடை வேலைகள் மேற்கொள்ளவேண்டிய நிலைமை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# தியாகி திலீபன் நினைவு தடகள விளையாட்டுக்கள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவாக நடைபெற்றுவரும் தடகள விளையாட்டு விழாவை ஒட்டி நாளை யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் ஆண்கள், பெண்களுக்கான வேக நடைப் போட்டி நடைபெறவுள்ளது.

காலை 6 30 மணியளவில் நடைபெறவிருக்கும் இப் போட்டிக்கு விண்ணப்பித்த அனைவரும் குறித்த நேரத்திற்குத் தவறாது சமுகம் தருமாறு கேட்கப்பட்டிருக்கின்றனர்.

அதேவேளை இதுவரை நடைபெற்ற போட்டிகளில் சண்டிலிப்பாய் வட்டப் பிரதேசம் ஒரு தங்கம், மூன்று வெள்ளி, இரண்டு வெண்கலம் ஆகிய பதக்கங்களையும், உடுவில் வட்டப்பிரதேசம் ஒரு தங்கம், ஒரு வெள்ளி ஆகிய பதக்கங்களையும், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் ஆகிய வட்டப் பிரதேசங்கள் ஒவ்வொரு தங்கப்பதக்கத்தையும், பளை வட்டப் பிரதேசம் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளது.

## ஐக்கிய

குத் தீர்ப்பு வெளிவந்ததும் ஐ தே. கட்சியில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மேற்கொள்ளவிருக்கும் களைபிடுங்கும் நடவடிக்கையையே இப்பேச்சு உணர்த்துகிறது என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் வழக்கில் சிறிமாவோ பண்டாரநாயக்கா தோல்வியைத் தழுவினால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் ஆதிக்கம் பெற்றிருக்கும் ஒரு கோஷ்டி சிறிமாவோவைக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகும்படி நிர்ப்பந்திக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறிமாவோக்குச் சார்பான தீர்ப்பு வழங்கப்படும் பட்சத்தில், அவர் கட்சியினுள் தனக்கு எதிராகச் செயற்படுபவர்களைக் கட்சியை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகிறன.

## நாய்களுக்கு தடுப்பூசி

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குற்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி கடந்த புதன்கிழமை தொடக்கம் பொதுவான இடங்களில் வைத்து போடப்பட்டுவருகின்றது.

எனவே இந்நடவடிக்கைக்கு வளர்ப்பு நாய் வைத்திருக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தரும்படி மேற்படி பிரிவு சுகாதார அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

சரி 11 பில்லியன் ரூபாவாகும் கடந்த வருடம் எப்போதும் இல்லாத வகையில் சிறிலங்கா அரசு 17 பில்லியன் ரூபாவை செலவுசெய்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. இத்தொகை குறைத்துக்காட்டப்பட்ட செலவீனங்களாகத் தோன்றும். உண்மையில் இராணுவ செலவீனம் 20 பில்லி ரூபாவைத் தாண்டியிருக்கக் கூடுமென்று பொருளாதார அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன் பிரகாரம சிறிலங்கா தேசிய வருமானத்தில் வருடமொன்றுக்கு 7 சதவீதம் வீண்விரயம் செய்கிறது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்புத் தெரிவித்துள்ள கருத்தின்படி பாதுகாப்புச் செலவீனங்களின் அதிக பணத்தை விரயமாக்கும் நாடு மனிதவள அபிவிருத்தியில் கவனம்செலுத்த முடியாத நிலை ஏற்படும் என்று அச்சம் தெரிவித்துள்ளது இக்கணிப்பின்படி சுகாதாரம், கல்வி, இறப்பு விகிதக்குறைவு ஆகிய மனித நல சேவைகளுக்காகச் செலவு செய்யப்பட்ட எமது தலை வருமானம் பாதுகாப்புச் செலவீனங்களுக்குப் பயன்படுத்தப்படுவதாககுற்றம்சாட்டப்படுகிறது.

சிறிலங்காவின் இராணுவச் செலவு 17 பில்லியன் ரூபா என்ற கண்துடைப்புக் கணக்கை ஒரு புறத்தில் ஒதுக்கி விட்டு செலவினத்தை 20 பில்லியன் ரூபா என்று எடுத்துக் கொண்டால் வருமானத்தில் 23 சதவீதம் பாதுகாப்புச் செலவுக்குப் பயன்படுத்தப்படுகிறது

கிழமை மாற்றியமைத்த பின்னரே இந்த அகதிகளைத்திருப்பி அனுப்பும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது இதற்கு எதிராக மீண்டும்மனுப்பண்ணபாட்டாளிகள் மக்களகட்சியும் தமிழர் தேசிய இயக்கமும் முனைந்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணை செப்டம்பர் 17-ம்திகதி நடைபெறும்.

இலங்கை நிலைமை பாதுகாப்பானதாக இல்லை என்று அவர்கள் வாதாடுவார்கள் உயர் நீதிமன்ற நீதிபதி கோர்தாசன் அவர்கள் தமது தீர்ப்பு தமிழிலேயே மொழி பெயர்க்கப்பட்டு தமிழ் நாட்டிலுள்ள அனைத்து அகதிகளுக்கும் காண்பிக்கப்பட்டுள்ளதுஎன்று ஊர் செல்ல விரும்பும் அகதிகளின் கையொப்பமும் தமிழிலேயே இடப்படுதல் வேண்டும் எனக் கேட்கப்பட்டது

சிறிலங்காவின் பற்றாக் குறை வரவு செலவுத்திட்டம், பணவீக்கம், பணத்தை அதிகமாக வெளியிடுவதால்ஏற்படும் விலைவாசிகள் ஏற்றம் மற்றும் சிறிலங்கா அரசு சென்மதி நிலுவையைச் செலுத்த முடியாத நிலை ஏற்படுவது என்பனவற்றிற்கு அடிப்படைக் காரணமாக அமைவது பாரிய இராணுவச் செலவினம என்று விமர்சகர்கள் அண்மையில் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இந்த நிலைப்பாடானது எமது பொருளாதார வளர்ச்சியை முடங்கச் செய்துவிடும் காலப்போக்கில் பாரிய எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்று பொருளாதார விமர்சகர்கள சுட்டிக் காட்டியுள்ளனர்.

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

வேலைப்பகுதி தொழிலாளர் / பொதுத்தொழிலாளர்

(அமைய)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது

தகைமைகள்:

01. கல்வி; 5ஆம் வகுப்பில் சித்தி
02. வயது: 18 வயது தொடக்கம் 40வயது வரை
03. யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்

விண்ணப்பதாரிகள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும், தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் 05-09-1992-ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் இந்து வீடுதியில் உள்ள மாநகரசபை மராமத்து பொறியியலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31-08-1992 (சி 4980)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 31-08-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5424

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

27-9764, 2?-2345, 27-6583, 28-6996, 27-8179, 26-6526, 27-4023, 28-940, 22-4862, 42-0969, 42-761, 26-4510, 41-5947, 26-3390, 41-9746, 28-9327, 26-1169, 42-3815, 27-1027, 26-3628, 26-5112, 26-4683, 28-8037, 41-6686, 40-1079, 26-8674, 22-9257, 27-9052, 26-2317, 27-9492, 42-3141, 26-6320, 40-1352, 26-535, 28-912, 26-2299, 42-9625, 24-5137, 27-4301, 41-6544.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு செப்டம்பர்மாதம் 01- ஆம் திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.